ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்த்ரமௌளீசுவராய நம:

ஆர்ய தர்மம்.

ஸாதனானுஷ்டான ஸமயத்தில் ஸாவதானமாக விழித்துக்கொண்டிருப்பவனே புத்திமானாவான். அப்பொழுது ஏமாந்துபோய்விட்டு பலானுபவகாலத்தில் புலம்புவது புத்திபடைத்ததற்குத் தகுந்ததல்ல. ஒரு கார்யத்தின் பலனைக்கண்டெடுக்க அதற்கு ஸாதகமாயுள்ளவர்களைத்தழுவி நிற்பதும் ஸாதனானுஷ்டானத்திற் சேர்ந்ததாகும். அவர்களைக்கவனிக்காமல் உபேக்ஷைசெய்வதும், அவர்கள்சொல்லுக்குவிபரீதமாகநடப்பதும், ஏமாந்துபோவதாகும், தைவமொன்று உண்டென்று நம்பிக்கையுள்ளவர்களெல்லாம் தம்முடைய இஷ்டஸித்திக்கு தைவானுகூல்யமும் ஸாதகமென்று நினைத்து ஸர்வ கார்யாரம்பத்திலும், இஷ்டதைவத்தை வேண்டிக்கொண்டு அந்த தைவத்தின் மனம் கோணாமல் நடந்துகொள்வார்கள். இப்படிச்செய்துகொண்டுவரும் பக்தஜனங்களிடத்தில் அந்த தைவம் பிரஸாதம் செய்து அவர்களுடைய இஷ்டஸித்தியுண்டாகும்படி செய்யும் இவர்கள் நினைத்தபடியே தைவமும் நினைக்கும், அவர்கள் ஒன்று நினைக்க தைவம் வேறொன்றைநினைக்காது. தைவத்தின் இஷ்டப்படி நடக்காவிடில் இவர்கள் ஒன்றுநினைக்க தெய்வமொன்றுநினைக்கும். அப்பொழுது "நாமொன்றுநினைக்க தெய்வமொன்று நினைக்கின்றதே" என்று வருத்தப்பட்டு புலம்புவதில் பிரயோஜனமொன்றுமில்லை. இப்படியிருக்கையில் தற்காலத்திய சிலர் தங்களது கார்யஸித்திக்காகத் தைவத்தையேநம்பியிருப்பதாகச் சொல்லிக்கொண்டு அந்த தைவத்தின் நோக்கத்திற்கு நேர் விபரீதமாகப்பேசியும், நடந்தும் வருகிறார்கள். வர்ணாசிரம தர்மவியவஸ்தையும், அதில் தீண்டாமை முதலிய ஏற்பாடுகளும், தைவஸம்மதப்படி அமைந்துள்ளனவேயல்லாது சில மனுஷ்யர்கள் கற்பித்துவிட்டதல்ல. அதில் துவேஷங்கொண்டு வர்ணாசிரமதர்ம வியவஸ்தையை அடியோடு அழிப்பதும், தீண்டாமை விலக்குவதுமே தமதுகடமையாக தற்காலத்திய சிலர்நினைக்கிறார்கள். தைவமோ இப்படி ஒருபொழுதும் நினைக்கவேயில்லை என்று பிரமாணமூலமாகத்தெரிகிறது. அதில் தைவ ஸங்கல்பமும், இவர்கள் நினைப்பும் ஒன்றாயில்லை. அதனால் இவர்கள் நினைத்தகார்யம் நடக்கவொட்டாமல் தைவம் தடுத்துவிடுகிறது. இந்த உண்மையை சுயமாகத் தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும், பழைய வழக்கத்தையனுஸரித்து ஒருவர் சொல்லுவாரானால் அதையாவது கேட்டுக்கொள்ளவேண்டும். அதைக் கேளாததோடுநிற்காமல், அவர்மீது மீளாக் கோபங்கொண்டு அவர் மண்டையை உடைத்துவிடவேண்டுமென்றும், அது தனக்கு ஸந்தோஷகரமான கார்யமென்றும், நினைத்தும், சொல்லியும், நடத்தியும் வருவார்களானால் இதைவிடவிபரீதகாரியம் வேறு உண்டோ? அந்த காலத்தில் இவர் நினைத்தபடி தைவம் எப்படி நினைக்கும், தனக்கு விபரீதமாக மனிதன் நினைத்துவிடுகிறான். அப்படித்தைவம் தன் ஸங்கல்பத்திற்கு விபரீதமாக நினைக்குமா? ஒருபோதும் நினைக்காது. ஆகவே தைவ ஸங்கல்பம், விபரீதமாய்நடக்கும் மனிதனுடைய நினைப்புக்கு மாறுதலாகவேதானிருக்கும். அதில்வருத்தப்படுவதிலபயனில்லைமுந்தியே தைவ ஸ்ங்கல்பத்தைத் தெரிந்துகொண்டு அதற்கு அனுகுணமாக நடப்பதே புத்திசாலித்தனம். அப்படியே யாவரும் நடந்து சிரேயஸ்ஸை அடைவார்களாக, சுபம்.

பத்திராதிபர்,

ஆர்யதர்மம்.

ப்ரஜாபதி-ஸு மார்கழிமீ ௨௧௨

தீண்டாமையொழித்தல் தைவ ஸம்மதமா?

தன் கார்யஸித்திக்குத் தைவானுகூல்யத்தை அபேக்ஷிப்ப
வன் தைவஸம்மதப்படி நடக்கவேணும். தீண்டாமையொழிப்
பதில் தைவ ஸம்மதமிருக்கிறதா என்பதை அதில் பிரவேசிப்பவர்
முதலில் கெவனிக்கவேண்டும். அதையும் பிரமாணமூலமாக
ஆராய்ந்துபார்த்து கெவனிக்கவேண்டுமேயன்றி தம் நோக்கம்
போல் நினைத்துக்கொண்டுவிடக்கூடாது. தனக்குத்தோன்றுவ
தெல்லாம் சரியாகவேயிருந்துவிடுமென்று அற்பக்ஞன் நினைக்கக்
கூடாது. அப்படியானால் எவன் எதை நினைத்தாலும் செய்தா
லும் அதைப் பிசகென்று ஒருவரும் சொல்லமுடியாது. பிறர்
ஸொத்தைத் திருடிப் பிழைப்பதே தேவலையென்று ஒருவன்
நினைத்து அப்படியேசெய்து விடுவானாகில் அதைப்பிசகென்று
எவராவது சொல்லமுடியுமா? ஹிம்ஸிப்பதேசிறந்ததென ஒருவன்
நினைத்துவிட்டால் அது சிறந்ததாய்விடவேண்டுமே. அப்படி-
யாகுமா? ஆகுமெனின் அஹிம்ஸாதர்மத்தைப் பெரிதாகப்பாராட்
டுவது எங்ஙனம் பொருந்தும்? திருடர்களையும் பரஹிம்ஸைசெய்
பவர்களையும் ராஜாங்கத்தில்சிக்ஷிப்பது எப்படியுக்தமாகும்? ஆகவே
மனிதர்களுக்குத் தோன்றிவிடுவதெல்லாம் தைவ ஸம்மதமும்
சாஸ்திரஸம்மதமுமாய்விடாது. மனிதர்களுக்கு ஒவ்வொரு காலத்
தில் ஒவ்வொன்று தோன்றலாம். அது சாஸ்திர சம்மதமாயிருந்
தால் அதுவே தைவஸம்மதமாகையால் அதை நிஷ்களங்கமாகச்
செய்யத்துணியலாம். சாஸ்திரஸம்மதமாயில்லாவிடில் அதுதைவ
ஸம்மதமாகாதென்றும், செய்யக்கூடாதென்றும்நிச்சயித்து, விலக்க
வேண்டியது. பிரகிருதம் தீண்டாமை விலக்கைப்பற்றி விசா
ரணை செய்தால், ஹிந்துக்களெனப்படுவோரோ தீண்டாமையைக்
கற்பித்து தீண்டாதவர்களைக்கெடுத்துவிட்டதாகத் தற்காலத்திய
வர் அபிப்பிராயப்படுகிறார். அது முற்றிலும் தவறு. பிரபஞ்ச
ஸிருஷ்டியிலேயே பரமேசுவரன் சுத்த ஜாதிகளை ஸிருஷ்டித்தது

போல் ஸங்கரஜாதிகளையும், அதிலும் பிரதிலோமசங்கர ஜாதிகளாகிய தீண்டாதவர்களையும் ஸிருஷ்டித்தாரென பரமேசுவரனை எந்தப்பிரமாணம் அறிவிக்கின்றதோ! அதேபிரமாணம் போதிக்கின்றது. ஆகவே ஹிந்துக்கள்மீது இந்தப்பழி சுமத்துவது சரியன்று. அன்றியும் பல தலைமுறைகளாகத் தீண்டாதவருக்கு ஹிந்துக்கள் செய்துவந்தபழிக்கு ஹிந்துக்கள் உயிரைக்கொடுத்துவிட்டாலும் பரிஹாரமாகாது என்றும், இந்த வெட்கக்கேடான காரியத்தைப் போக்குவதற்கு ஹிந்துக்கள் எவ்வளவுதான் தியாகம் செய்தாலும் போதாது என்றும், ஹிந்துக்கள்மீது ஆத்திரப்படுவது அநுசிதமேயாகும். அல்லாமலும் ஹிந்துக்கள் சிலரது தலைகளைத் தீண்டாதவர்கள் உடைத்துவிட்டாலும் நான் கோபங்கொள்ளாமல் சந்தோஷப்படுவேன். என்றும், நான் என்றால் ஆனவரை பாடுபடுவேன் என்றும் சந்தோஷப்படுவதும், வீரவாதம் பேசுவதும், தீண்டாதவருக்கு ஆத்திரத்தை ஊட்டுவதும் அஹிம்ஸாபரர்களுக்கு அழகல்ல. தீண்டாதவர்களுக்குத்தானொரு ஊழியம் செய்பவனெனசொல்லிக்கொள்வதாலேயே ஸகல ஸாம்ராஜ்யமும் கையில் வந்துவிட்டதாக நினைத்து ஆனந்தப்படுவதைக்காட்டிலும் ஹிந்துக்களில் சிலரது மண்டையைத்தீண்டாதவருடைக்கக் கண்டதினமே ஸுதினமாகுமென்று நிச்சயித்து ஸந்தோஷப்படுவதில் சிலருக்கு அதிஉற்சாஹமிருக்கிறது. இதெல்லாம்—"நான் தைவத்தை நம்பியிருக்கின்றேன்" என்று சொல்லிக்கொள்வதற்கு முற்றிலும் விரோதமாயுள்ளது, அதெல்லாம் தெய்வ ஸம்மதமென்று தைவத்தை அங்கீகரிப்பவன் கனவிலும் நினைக்க சாஸ்திரம் இடங்கொடுக்கவில்லை. அதனால் தீண்டாமை விலக்கு தைவஸம்மதமான காரியமே அல்ல, தீண்டாதவரைத்தூக்க எவ்வளவு பிரயத்தினம் செய்யினும் செய்யட்டும். அதற்காக ஹிந்துக்களில் சிலரது மண்டையை உடைக்கும்படி தீண்டாதவரைத்தூண்டுவது எவ்விதத்திலும் ஸம்மதமாகாது. நன்றாக அவர்களொப்புக்கொண்ட தைவம் சொல்லியிருப்பதை யாராய்ந்து பார்க்கட்டும். வீணாகப் பிறர் ஹிம்ஸையில் ஆனந்தப்படுவது அஹிம்ஸாமுறைக்கு ரொம்பவிரோதமாயுள்ளது. என்பதை ஏகாந்தத்தில் உட்கார்ந்து ஆலோசிக்கட்டும். தீண்டாததவரைத்தூக்கித்திரிபவர்கள் தீண்டாதாரல்லாதவருக்குச் செய்துவரும் பழிக்குப் பரிஹாரத்தை அவர்களது தைவம் சொல்லிக்

கொடுத்துவிட்டதா? திண்டாதவர் ஹிந்துக்களில் சிலரது மண்டையை உடைத்துவிட்ட க்ஷணத்திலேயே அகிலலோக ஸாம்ராஜ்யபதவி கிடைத்துவிடுமென்றாவது சொல்லிக்கொடுத்ததா? அசட்டுத்துணிச்சலால் அவஸரப்பட்டு தைவஸம்மதமில்லாத கார்யத்தில் புகுந்து கார்யஸித்தியைக் கைநழுவ விடவேண்டாம். தைவ ஸம்மதப்படி நடந்து யாவரும் ஸகல சிரேயஸ்ஸையும் அடைவார்களாக. சுபம்.

பத்திராதிபர்.

ஸ்ரீபகவத்பாதவைபவம்.

प्रद्योतते हृदब्जे मे चन्द्रशेखरसंयमी ।
सूक्तयो यस्य लोकेषु प्रसरन्ति सुधामुचः ॥

எந்த பரமாசார்யாளின் அழகிய மொழிகள் உலகங்களில் அமிழ்தத்தைப்பெருகவிடுகின்றனவோ, அந்த சந்திரசேகரேந்திரஸரஸ்வதீஸ்வாமிகள் எனது ஹிருதய கமலத்தில் பிரகாசிக்கின்றார்கள்.

ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாளின் காலநிர்ணயம், மடம், லிங்கபிரதிஷ்டை முதலான சரித்திரங்களில் பற்பல நூல்கள் முரண்பட்டு பற்பலவிதங்களாய் அறிவிக்கின்றன என்பதை நூலாராய்ச்சிசெய்யும் கவிவாணர்களே நன்கு உணர்ந்திருப்பார்கள். ஆனாலும் எவ்வளவுக்கெவ்வளவு பண்டைய நூல்கள் ஆராய்ச்சிசெய்யப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அந்நூல்களினின்றே ஒருவிதமாய் முடிவுக்குவரலாம், என்று அறிஞர்களின் கொள்கை. ஏனெனில் முன்னோர்கள் கூடியமட்டிலும் சித்தப்பிரஸாதம்பெற்று பகவத் பக்தர்களாயிருந்தால் அவர்களுடைய நிர்மலமான மனதில் பொய்ப்பொருள்பதிய இடமில்லை. அவர்கள் மனதில் நிஷ்கல்மஷமாய்ப்பட்டதையே நூலாக வெளியிட்டிருக்கின்றனர். பிறிது புதிதாகத்தோன்றும் நூல்களிலோ அவ்விதமாக இருக்கக்கூடும் என்று சொல்வதற்கு அச்சமின்றி எழுத முன்வரமுடியாது.

பிரகிருதத்தில் அநேக நல்லாசிரியர்களிடமிருந்தும், ஆசார்யஸ்தானதிபதிகளிடமிருந்தும், தெரிந்துகொண்ட விஷயங்களை நூல்களோடு ஒத்துப்பார்த்து, ஸ்ரீபகவத்பாதவைபவம் என்று பெயரிட்டு, முக்கியமான அம்சங்களைமட்டிலும் வெளியிடத் தொடங்குகிறேன்.

(1) ஸ்ரீபகவத்பாதாவதாரப்பிரமாணங்கள்.

ஸ்ரீருத்திரத்தில் **मुण्डितकेशाय** என்றுபொருளுள்ளபதத்தால் ஸந்நியாஸி முதலான ரூபத்தால் முண்டிதகேசரான ஸ்ரீசங்கரனே பகவத்பாதாள் எனத் தெளிவாய் விளங்குகின்றது. மேலும் சுகத்தையுண்டாக்குவதால் “சம்பு” என்று அதேபொருளையும் அடுத்த பதத்திற்கும் அதே பொருளையும் வெளியிட்டாலும், ஒன்று சிற்றின்பம், மற்றது பேரின்பம், என்றும், பிதாமுதலான ரூபத்தால்லௌகிகசுகத்தையும்ஆசார்யாள்ரூபமாக மோக்ஷ சுகத்தையும் பகவான் தருகிறார், அது அதற்கு அடுத்தபதங்களால்தெளிவாய்வெளியாகிறது என்று ஸாயணர் வேதபாஷ்யமியற்றியிருக்கிறார். இதனால் ச்ருதிபிரமாணம் எடுத்துரைக்கப்பட்டது.

ஸ்மிருதிகளும் இப்பொருளை விஸ்தாரமாய் உபபிருஹ்மணம் பண்ணுகின்றன. ஸௌரம், கௌர்மம் பூர்வார்த்தம், பவிஷ்ய புராணம், விஷ்ணுதர்மோத்தரம், பிருஹத்ஸங்கமதந்திரம், சிவரஹஸ்யம் நவமாம்சம், சைவம், ஏகாதசருத்திரஸம்ஹிதை முதலானவைகள். ஷெடிப்பிரமாணவசனங்களை விஸ்தாரமாய்விடும் என்றநோக்கத்தால் இங்கு எழுத முன்வரவில்லை. ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாமவியாக்கியாதாவான ஸ்ரீபாஸ்கரதீக்ஷிதாள் இயற்றிய இரண்டு ச்லோகங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

श्रीरामं प्रति पुष्कराभिध महायक्षेण वेदत्रय -
व्याख्यानावसरे विशिष्य कथितं श्रीविष्णुधर्मोत्तरे ।
एतां धेनु मुपह्वयामि सुदुघामित्युगातं शंकरा -
चार्यं शिष्यचतुष्टयेन सहितं वन्देगुरूणां गुरुम् ॥
वर्षेष्वतीतेषु शकेषु षट्सु तिष्येऽवतीर्णं भुविशङ्करार्यम् ।
शिष्यैश्चसुर्भिः सहितं शिवादि पारंपरीकावधिमानमामः ॥

விஷ்ணுதர்மோத்தராசிரந்தத்தில், புஷ்கரன் என்ற யக்ஷராஜனால் ஸ்ரீராமச்சந்திரனுக்கு மூன்று வேதங்களின்பொருளையறிவிக்கும்

போது एतां धेनुमुपह्वयामि सुदुघा என்ற ரிக்குகளால் விசேஷமாக அறிவிக்கப்படுகின்றவரும், நான்கு சீடர்களோடு கூடினவரும், குருக்களுக்குங்குருவுமான ஸ்ரீசங்கராசார்யாளைவணங்குகின்றேன் இதேபொருளை இரண்டாவது ச்லோகமும் அறிவித்து அந்தகுரு பரம்பரையை வணங்குகிறேமென்று பாஸ்கரமகீந்திரர் சொல்லி இருக்கிறார்.

(2) கலியில் ஜனங்களின்செய்கை.

ஆசார்ய விஜயத்தில் கூறப்பட்டதை இங்குமொழிபெயர்க்கிறேன்.

வைதிகாசாரத்தை நழுவவிட்டவர்களும், கபடாசாரம்பூண்டவர்களுமான பிராம்மணர்கள் விசித்திரங்களான அடையாளங்களால் தேஹங்களில் தப்தமுத்திராங்கனம் செய்துகொண்டு விதிப்படிசெய்யவேண்டிய அக்னிஹோத்ராதி கர்மாக்களையநுஷ்டியாததோடு, நாங்கள் லிங்கிகள் என்ற அபிமானங்கொண்டு வேதாத்யயனம், ச்ராத்தம், ஆக்கிரயணம்,ஸந்நியாஸம் முதலானவைகளைப்புறக்கணித்து, பாஷண்டிகளானார்கள். இம்மட்டோடில்லாமல் வெளிக்குமட்டிலும், விஷ்ணு, சிவன், பைரவர், சூரியன், கணபதி, தேவீ, இவர்களின் பக்தர்கள் என்று நடித்தனர். காபாலிகர் எனப்படுகின்றவர்கள் மத்யமாம்ஸங்களைப் புசிக்கத்தலைப்பட்டனர். மதம் ஒன்றேயாயினும்அறிவீனத்தால் வெவ்வேறாயமைத்துக்கொண்டு தயங்கினர்.

(3) ஜகத்குருவின் கதையின்சுருக்கம்.

குருரத்தினமாலையில்கூறப்பட்ட கதாஸங்கிரஹத்தையெழுதுகிறேன்.

பலமடைந்த கலியின்கோலாஹலத்தால் வைதிகமார்க்கம் சீர்குலையவே, வானவர்கள் ஒன்றுகூடி சிவபெருமானிடம் முறையிட்டனர். அப்போது கருணைவள்ளலான சிவபிரான் விஷ்ணு முதலான தேவர்களை தான் அவதரிப்பதற்கு முந்தியே பூமியில் அவதரிக்கச்செய்து கேரளத்தில் காலடியென்னும் கிராமத்தில் சிவகுருவுக்கு ஆர்யாம்பாளிடம் பரமசிவன் அவதரித்தார். சிவகுருவால் உபநயனஞ்செய்யப்பெற்று ஸ்ரீசங்கரன் என்றபெயர் வாய்ந்தார். தகப்பனார் லோகாந்தரஞ்சென்றபிறகு குருகுலவாஸஞ்செய்து முதலை காலைப்பிடித்தது. என்ற வியாஜத்தால் தாயாரின் அனுமதியின்பேரில் துறவியாகி, நர்மதாநதிக் கரையில் வஸிக்கும் ஸ்ரீகோவிந்தபகவத்பாதாளிடம் உபதேசம்

பெற்றார். பின்புகங்கைக்கரையடைந்து ஸூத்திரபாஷ்யமியற்றி, பிரயாகஞ்சென்று, குமாரிலபட்டரை உலகவாழ்க்கையினின்று நீக்கி, மண்டனரையடைந்து வாதப்போரில் அவரை வென்று துறவியாக்கி பரமாசார்யாளைப் பார்க்க பதரிகாசிரமஞ்சென்று அங்குகௌடபாதாளை தரிசித்துகைலாயஞ்சென்றார். அங்கிருந்து ஐந்து லிங்கங்களைக்கொண்டுவந்து திரும்புங்கால் பதரிகைசேர்ந்து ஸனந்தனர் முதலான சிஷ்யரோடு தங்கினர். பின்பு வியாஸா நுக்கிரஹப்பெற்று தாயின் அந்தியகாலத்தில் அவளால் நினைக்கப் பட்டு, ஆகாசமார்க்கமாய் அங்குசென்று அவளுக்குத்தத்துவோ படேசம்செய்து, அவளது உடலைத் தனது கையுரைப்பதாலுண் டான அக்கினியால் தஹித்து, மறுபடி பதரி சென்றார். மறுப டியும் அங்கிருந்து புறப்பட்டு சிருங்ககிரியில் சில வருடங்கள் வஸித்து ஸேது, ஸ்ரீகாளஹஸ்தி, முதலான க்ஷேத்திரங்களில் அடனம்செய்து, காஞ்சிபுரத்திற்குச் சென்று, ராஜஸேனசோழ மஹாராஜாவால் வரதர், ஏகாம்பரநாதர், காமாக்ஷி, முதலான தெய்வங்களுக்கு ஆலயங்கள் கட்டுவித்து அங்கு உக்கிரமாயுள்ள கலையை ஸ்ரீசக்கிரத்திலிருந்து ஆகர்ஷணஞ்செய்து சாந்தப்படுத்தி ஆகாசவாணிரூபமாக வாதத்திற்கழைத்த சரஸ்வதியை பரகாயப்ர வேசத்தால் வென்று, அங்கு சாரதாமடத்தை ஸ்தாபித்தார். மேலும், ஸ்ரீகாமகோடி என்று பெயர்பெற்றதும், ஸர்வஞ்ஞ மூர்த்தியாலேயே அமரக்கூடியதுமான பீடத்தில் உட்கார்ந்து சிலகாலம் வஸித்து சிஷ்யரைக் காப்பாற்றினர். அந்தஸ்தா னத்தில் "சித்கன:" என்ற பாலஸந்நியை ஸ்தாபித்து ஸுரேச்வ ரரை மேல்பார்வையாகயிருந்து ரக்ஷிக்கும்படிகட்டளையிட்டு நமது பரமாச்சார்யாள் ஸ்வஸ்தானத்தையடைந்தார்.

4-அவதாரப்பிரகரணம்,

விஷ்ணு முதலான தேவர்கள் ஸநந்தனர் முதலானவர்களாக அவதரித்தனர், பிராசீனசங்கரவிஜயத்தில் சொல்லியதாவது.

விஷ்ணு ஸனந்தராகவும், பிரமன் மண்டனராகவும், வாயு ஹஸ்தாமலகராகவும், அக்கினி உதங்கராகவும், பிருஹஸ்பதி ஆனந்தகிரியாகவும், குஹர் குமாரிலபட்டராகவும், வருணன் சித்ஸுகராகவும், மிருத்தியு பிருத்துவீதரனுகவும், யமன் விச்வ ரூபனுகவும், இம்மாதிரியே சந்திரன், சூரியன், இந்திரன், சேஷன்

முதலான தேவவர்க்கத்தவர்களும், வேதமார்க்கத்தை பூஷிக்ககவும், துர்வாதிகளைக் கண்டிக்கவும் சிவாஞ்ஞையால் அவதரித்தனர். என்று தொடங்கி, காலடியை வர்ணித்து குமாரிலரின் முயற்சியைக் கிரமமாக நிரூபித்து,

ईशोऽप्यभूत् स्मद विद्वदभेद्यदर्प सर्पाहितुण्डिक विदग्धसहस्रसेव्ये ।
विद्याधिपत्यपरनाम्नि कुले शिवाख्यादार्यापते रविसहस्ररुचिः कुमारः ॥

மதங்கொண்ட வித்வான்களின் அபேத்தியமான கொழுப்பாகிற ஸர்ப்பங்களுக்கு, பாம்பாட்டிகளான பண்டிதக்கூட்டத்தால் கொண்டாடப்படும் வித்யாதிபதியின் குலத்தில், ஆர்யாம்பாளின் பதியான சிவகுருவுக்கு ஆயிரம் கதிரவர்களுக்கொப்பான குமாரன் ஜனித்தான்.

तिष्ये प्रयात्यनलशेवधिबाणनेत्रेयोनन्दने दिनमणावुदगध्वभाजि ।
राधेऽदितेरुडुनिनिर्गतमङ्गलग्नेऽप्याहूतवान् शिवगुरुस्स च शङ्करेति ॥

கலி 2593 (508 B C) நந்தனவருஷ உத்தராயணசைத்திரம்புனர்வஸு நக்ஷத்திரங்கூடியசுக்லபஞ்சமியில் ஆச்சார்யாளின் ஜனனம் பிதாவால் ஸ்ரீ சங்கரன் என நாமகரணமிடப்பட்டது. என்பதாதி.

K. V. சுப்பிரமண்யசாஸ்திரி.

ஆயுர்வேதம்.

"ஆயுர்வேதம்" மக்களுடைய ஆயுளைத் தெரிவிக்கக்கூடிய நன்னூலாகும். அஃது இன்பமான ஆயுள், துன்பமான ஆயுள் என இருவகைத் தன்மைகளையும் நன்கு தெரிவிக்கின்றது. ஆதலினாலேயே "ஆயுர்வேதயதீத்யாயுர்வேத:" எனும் வாக்கியம் ஏற்பட்டுள்ளது. இவ்விதபெருமைபொருந்தியதாயும், உயர்நலம் பயப்பதாயுமுள்ள ஆயுர்வேதமானது இப்பொழுது அசட்டை செய்யப்பெற்றும், பாழாக்கப்பெற்றுமிருப்பதை அறிந்து அதுபற்றியுள்ள சில விஷயங்களை ஆராய்ச்சிசெய்ய அவசியமெனக்கருதி இங்கு எழுத முற்பட்டனம். இவ்வுலகின்கண் மிகவும் புகழ்பெற்றவராயும், மக்கட்கு இன்னல் பயத்திடும் கொடியநோய்களை நீக்கியவராயும், ஆயுர்வேதத்தில் அன்புபூண்டு அதனை நீடூழி நிலைத்திருக்கவேண்டுமென பாடுபட்டுழைத்தவராயுமிருந்த பண்

டித கோபாலாசார்லு அவர்களை இந்நாட்டில் அறியாதார் எவரும் இலர், அவர்பல பெரியாரது பேருதவியைக்கொண்டு ஒரு சங்கத்தை ஏற்படுத்தி இருக்கிறார். அதன் விடாமுயற்சியின் பயனாக கருணைமிகுந்த துரைத்தனத்தாரது எண்ணமும் இனிதே ஏற்படலாயிற்று. பிறகு ஒரு கலாசாலையும் ஏற்படுத்தினர். ஆனால் மேற்படி கலாசாலையானது சென்னை ஆயுர்வேதசங்கத்தினர் எந்த நோக்கத்துடன் துரைத்தனத்தாரைக் கேட்டுக்கொண்டனரோ அதற்குமாறாகவே இருந்துவரலாயிற்று. ஆஸ்திக மகாஜனங்கள் இதுபற்றி வியப்படைதல் கூடும். ஆயுர்வேதத்திற்கு விரோதமாக யாது நடக்கிறது எனக்கேட்பின் விடை கூறுவாம். மேற்படி கலாசாலைக்கு ஸ்கூல் ஆப் இந்தியன் மெடிஸன் என்பது பெயராகும். அக்கலாசாலையில் சேர்க்கப்படும் மாணவர்கள் ஆறாவது பாரம் தேறியிருக்கவேண்டுமாம். வடமொழியில் சிறிது பயிற்சியிருந்தாலும் போதுமாம். ஆங்கிலப்பயிற்சியில்லாவிடில் அன்னவர்க்கு அக்கலாசாலையில் இடம் கிடைக்கமாட்டாதாம். ஆயுர்வேத முறைக்குவந்த நிலைமையை என்னென்றுரைப்பது. வடமொழிப்பயிற்சியில்லாமலேயே ஆயுர்வேதப்பயிர்ச்சி அளிப்பர்போலும். இங்கு நடக்கும் பாடங்களை நோக்கின் இந்தியன் மெடிஸன் என்னும்பெயர் ஒன்றுதவிர போதிக்கும் பாடங்கள் பெரும்பாலும் ஆங்கில வைத்தியமுறையே. ஆங்கில முறைப்படி நடத்தவேண்டியிருப்பின் ஏற்கனவேயுள்ள மெடிகல் காலேஜுடன் இதையும் சேர்த்துவிடலாம். அவ்விதமில்லாமல் ஆயுர்வேத கலாசாலைக்கெனத்தனியே பெரும்பொருள் செலவிட்டு அதை ஒழுங்காக நடத்தாமல் இருந்துவருவது பெரிதும் வருந்தத்தக்கதாகும். பல விடங்களிலும் சிக்கனம் பிடித்துவரும் துரைத்தனத்தாருக்கு இவ்விஷயம் தெரியாமல்போனது பெரும் வியப்பே. இஃதெல்லாவற்றிற்கும் காரணம் யாதெனின் அக்கலாசாலையை ஏதேச்சாதிகாரமாய் நடத்திவரும் சிப்பந்திகளுக்கு ஆயுர்வேதத்தில் பயிற்சியில்லாததொன்றே இதன் முதன்மையான காரணமேயல்லாது அரசாங்கத்தாரை குறை கூறுதலினால் பயனில்லை. அவ்வாயுர்வேத கலாசாலையின் சிப்பந்திகள் பலவிதமாய் பொது மக்களுக்கு மிக்க மனவருத்தத்தை அளிக்கக்கூடிய பல உத்தரவுகளை நிறைவேற்றி வைத்திருக்கின்றனர் எனவும் தெரியவருகிறது, அவ்விவரங்களை மற்றொரு கட்டுரையில் எடுத்

துரைப்பாம். பொதுமக்கள் கொண்டிருக்கும் கருத்து என்ன வெனில்:—

(1) இக்கலாசாலையை ஒழுங்குபெற நடத்தும் திறமை வாய்ந்துள்ள வைத்திய பண்டிதர்களிடம் ஒப்புவித்து மேற்பார்வையைமட்டும் துரைத்தனத்தார் பார்த்துவருவது.

(2) பெயர் ஒன்றுயிருக்க ஆங்கு நடைபெறும் குறைகள் வேறுயிருந்துவரின் அவற்றைக் கண்ணுறும் பொதுமக்கள் பரிகசித்தல் கூடுமன்றே. ஆகையால் இக்கலாசாலைக்கு இப்பொழுது வைத்துள்ளபெயரை எடுத்துவிடுதலே மிகச்சிறந்தது. மேற்கூறப்பட்டுள்ள கருத்து கருணை மிகுந்த துரைத்தனத்தாருக்கு மனதிற்குப் பிடித்தமில்லாதிருப்பின் பண நெருக்கமிருந்த இக்காலத்தில் அக்கலாசாலையை மூடிவிடுவது மிகச் சிறந்ததாகும். ஆயுர்வேத வளர்ச்சிக்கென இக்கலாசாலையைச் சொல்லிக்கொண்டும் பொது ஜனங்களைமயங்கச்செய்துகொண்டும், மெடிகல் காலேஜுக்கு துணையாக இவ்வாயுர்வேத கலாசாலையை ஏற்படுத்தியிருப்பதானதுமிகவும்விந்தை. ஆகையால் துரைத்தனத்தார் ஆராய்ந்து யாதுசெய்யப்போகின்றனர் என்பதை ஆவலுடன் கவனிப்போமாக.

டி. எஸ். பாலசுப்ரமண்ய சாஸ்திரிகள்.

மத்வாவதாராத்புதலீலாரகஸ்யங்கள்

(1073-ம்பக்கத்தொடர்ச்சி)

மத்வாசார்யாள் மற்ற பாஷ்யகாரர்களுக்கு விலக்ஷணமாய் தனது அவதாரமஹிமையைத் தானே தனது கிரந்தங்களில் பிரசம்ஸித்துக்கொள்ளுவதாகிய ஆத்மப்பிரசம்ஸை ஐந்தாவது ரஹஸ்யம். அது வருமாறு. மத்வாச்சார்யாள், தான் வாயுபகவானுடைய மூன்றுவது அவதாரமென்றும், தனக்கு முந்தி வாயுதேவர் முதலில் ஹநுமானுகவும், பிறகு பீமஸேனனுகவும், இரண்டு அவதாரங்கள் செய்தாரென்றும், முதலவதாரத்தினுல் ஸ்ரீராமச்சந்திரமூர்த்திக்கும் இரண்டாவது அவதாரத்தினுல் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவுக்கும் மூன்றுவது அவதாரமாகிய தம்மால் ஸ்ரீவேதவ்யாஸருக்கும் இவ்விதம்ஸ்ரீமந்நாராயணனுடைய மூன்று

அவதாரங்களிலும் தானும் அவதரித்து வாயுதேவர் பகவானுடைய கார்யங்களுக்கு ஸஹாயம்செய்தாரென்றும் தனது மஹிமையைத் தனது ஒவ்வொரு கிரந்தங்களிலும் தவறாமல் முடிவில் எழுதிக்கொண்டிருக்கிறார். அந்த சுலோகம் வருமாறு,

यस्यत्रीण्युदितानि वेदवचने दिव्यानिरूपाण्यलं
बट्तद्दर्शतमित्थमेव निहितं देवस्यभर्गो महत् ।
वायोरामवचोनयं प्रथमकं पृक्षोद्वितीयं वपु
र्मध्वो यत्तुतृतीयमेतदमुनाग्रन्थः कृतः केशवे ॥

"எந்த வாயுதேவருடைய திவ்யங்களாயும், அத்யுத்தமங்களாயுமுள்ள மூன்று ரூபங்கள் बळित्था என்பது முதலிய ரிக்வேத மந்திரங்களில் சொல்லப்பட்டிருக்கின்றனவோ அவ்வித வாயுதேவருடைய बट् பலாத்மகமாயும் दर्शत ஜ்ஞான பூர்ணமாயும் भर्ग: பர்=பரித்தல் க=கமனம் என்கிற குணங்களுடையதாயும் உத்தமமாயுமுள்ள அவ்வித மூலரூபமானது மேல் கூறப்படும் மூன்றுவித அவதாரத்தின் பொருட்டு பகவானால் பிரேரிபிக்கப்பட்டு அவதரித்தது. அவ்வித அவதாரங்களுள் முதலாவது ஹநுமத்ரூபமானது ஸ்ரீராமனுடைய வார்த்தையை ஸீதாதேவியின் பொருட்டுக்கொண்டுபோவது அல்லது ராமவிஷயங்களான மூலராமாயணமென்னும் அத்புத வசஸ்ஸுகளைச் சிஷ்யர்களுக்குப்போதிப்பது. இரண்டாவது பீமஸேன ரூபமான (पृक्ष:) (पृ) பிருதனையைக் கௌரவஸேனையை (क्ष:) நாசம்செய்வது. மத்வர் என்கிற யாதொரு மூன்றாவது ரூபமுண்டோ (मधु) ஆனந்தமான (व) தீர்த்ததை அதாவது சாஸ்திரத்தைச் செய்ததால் மத்வர் என்றும் ஆனந்ததீர்த்தர் என்றும் அன்வர்த்தமான பெயர்களையுடைய ரூபம். அந்த ரூபத்தால் இந்த கிரந்தம் கேசவ ஸமர்ப்பணமாகச் செய்யப்பட்டது" என்று சுலோகத்தின் பொருள். இவ்விதம்தான் வாயுவின் மூன்றாவது அவதாரமென்பதை—

प्रथमो हनुमान्नाम द्वितीयो भीमसेनकः ।
पूर्णप्रज्ञस्तृतीयस्तु भगवत्कार्यसाधकः ॥

என்னும் ஓர் ஸ்மிருதிவசனம் கூறுவதாகவும் மத்வர்தானே எழுதியிருக்கிறார். இவ்வித ஸ்மிருதிவசனம் மத்வருடைய ஹிருதய

கமலத்திலுள்ளது வெளியில் அகப்படாது என்பதை நான்காவது ரஹஸ்யத்தில் கூறியுள்ளோம். இதில்மத்வருக்கு பூர்ணப்ரஜ்ஞர் என்றும் ஓர் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. பூர்ணமான பிரஜ்ஞையை உடையவர் என்று பொருள் ஸர்வஜ்ஞர் என்று பலிதமான அர்த்தம். புத்ததேவருக்கும் ஸர்வஜ்ஞர் என்று பெயருண்டு. மத்வருக்கும் அதே பெயர்தான். இரண்டுபேருக்கும் நாமஸாம்யம் இருப்பதை வாசகர்கள் கவனிக்கவேண்டும். புத்தருக்கும்மத்வருக்கும் உள்ள அந்தரங்க ஒற்றுமையைக்கீழ் இரண்டாவது ரஹஸ்யத்தில் தகுந்த காரணம்காட்டிக் கூறியுள்ளோம்.

बळित्था तद्वपुषे धायि दर्शतम् ॥

என்பது முதலிய சில ரிக்வேதமந்திரங்கள் தான் கல்பித்த வாயுவின் மூன்று அவதாரங்களையும் கூறுவதாகத்தானே மத்வர் கிரந்தங்களில் எழுதியிருக்கார். இந்த மந்திரங்கள் ஸூர்யனைக் கூறுவதாக ரிக்வேத பாஷ்யத்தில் ஸர்வஜ்ஞரான ஸ்ரீசாயணாசார்யாளென்றும் வித்யாரண்யஸ்வாமிகள் எழுதியிருக்கின்றார்கள். மத்வருக்கும் அந்த மந்திரங்களுக்கும் யாதொரு ஸம்பந்தமுமில்லை. அப்படியிருந்தும் தம்மை அந்த மந்திரம் கூறுவதாகத்தாமே கிரந்தங்களில் மத்வாசார்யாள் கூறுகின்றார்கள். தம்மைப்பற்றி மற்றவர்கள் சிலாகித்தால் அது அழகாயிருக்கும். தாமே சிலாகிப்பது ரொம்பவும் ஆச்சர்யமாயிருக்கிறது. அந்த மந்திரங்களில் मध्वउत्सव: என்பது முதலிய சில பதங்கள் இருக்கின்றன. அதனால் மத்வரைக் கூறுவதாக மத்வர் சொல்லுகிறார். அந்த மந்திரங்களிலேயே सहस्तुराय: என்றும் இருக்கிறது. அது ஸேதுராயரைக்கூறுகிறது என்றும் சொல்லலாம். नित्यपुष्टां करीषिणीं ॥ என்று வேதத்தில் இருக்கிறது. அதனால் வேதம் நெத்தியில் கரியை ஈஷிக்கிறதைப்பற்றிச் சொல்லுகிறது என்று கூறலாமா அப்படிக்கூறினால் பிராமாணிகர்கள் ஒப்புக்கொள்ளுவார்களா. அதைப்போல்தான் மத்வரைக் கூறுவதாகச் சொல்வதையும் பிராமாணிகர்கள் ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பதை ஒருவரும் சொல்லாமலே உலகமறியும். अनन्तरायाय सर्वस्तोम: என்று வேதத்தில் இருக்கிறது. அனந்தராயனைக்கூறுவதென்றும் சொல்லலாம். नाम नामैव नाममे என்று வேதம் நாமத்தைக்கூறுகிறதென்று சொல்லலாம். இவ்விதம் கூறுவதற்கு வியவஸ்தை

யுண்டோ? இவ்விதம் கூறும் விஷயத்தை எழுதினால் ஒருபெரும் புஸ்தகம் எழுதலாம். என்ன பிரயோஜனம். வேடிக்கைதான் இன்னொரு வேடிக்கையைக் கேளுங்கள்.

आनन्दतीर्थाख्यमुनिस्सुपूर्णप्रज्ञाभिधोग्रन्थमिमं चकार ।
नारायणेनाभिहितो बदर्यां तस्यैव शिष्यो जगदेकभर्तुः ॥

என்கிற சுலோகத்தை மத்வர் மஹாபாரத தாத்பர்ய நிர்ணயம் என்னும் தனது கிரந்தத்தில் எழுதியிருக்கிறார்.

"பூர்ணப்பிரஜ்ஞர் என்றநாமதேயம் படைத்து ஆனந்ததீர்த்தர் என்கிற முனிதான் ஜகத்துக்கெல்லாம் ஏக ஸம்ரக்ஷகரான ஸ்ரீநாராயணனுடைய அல்லது அவருடைய அவதாரபூதரான ஸ்ரீவேதவியாஸமுனியினுடைய ஸாக்ஷாத்சிஷ்யராயுள்ளவர் அவராலேயே பதரிகாச்ரமத்தில்பிரேரிக்கப்பட்டுலோகோபகாரார்த்தமாகஇந்த கிரந்தத்தைச் செய்தார்" என்று சுலோகத்தின்பொருள். இவ்விதம் லோகத்திலில்லாத சுருதி ஸ்மிருதி முதலிய வசனங்களைக் கல்ப்பிப்பதால் தன்னிடத்தில் ஜனங்களுக்கு இவர் அனுப்தர் என்கிற புத்தியும் தனது கிரந்தங்களில் அப்பிரமாண்யபுத்தியும் ஏற்பட்டு விடும். என்று பயந்து அவ்விதம் ஏற்படாமலிருக்க வேண்டிதான் மற்ற பாஷ்யக்காரர்களைப்போலில்லை. தான் பூர்ணபிரஜ்ஞன். ஸாக்ஷாத் ஸ்ரீமந் நாராயணனிடத்திலேயே அல்லது ஸ்ரீவேதவியாஸரிடத்திலேயே ஸகல வித்யைகளையும் நேரில்படித்தவன். மற்றவர்களுக்குத் தெரியாத சுருதிஸ்மிருதி வசனங்களை எல்லாம் வேதத்துக்கு ஸாக்ஷாத் கர்த்தாவான ஸ்ரீநாராயணனிடத்திலோ அல்லது எல்லாவேதங்களையும்பிரித்துவகுத்த ஸ்ரீவேதவியாஸரிடத்திலோ நேரில் பாடம் கேட்டவன். அவராலே உலகக்ஷேமார்த்தமாகப் பிரேரிக்கப்பட்டே இந்த அபூர்வ கிரந்தங்களைச் செய்தேன். இதைப்படித்து ஸகலமானவர்களும்கரையேறுங்கள். மற்ற பாஷ்யக்காரர்கள் என்னைப் போல் நேரில் ஸ்ரீநாராயணனுடைய அல்லது வேதவியாஸருடைய சிஷ்யர்களல்ல. அவர்கள் என்னைப்போல் அபூர்வ சுருதி ஸ்மிருதி வசனங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறார்களா? பூர்ணப்பிரஜ்ஞனான எனக்கு மாறுதலாக அவர்கள் அபூர்ணப்பிரஜ்ஞர்கள். அதனால்தான் அவர்களுக்கு எல்லாவேதங்களும் தெரியவில்லை. நான் உலகக்ஷேமார்த்தமாகத் தான் பகவான் செய்யவேண்டிய கார்யங்களைச் செய்கிறேன்.

அதனால் எனக்கு ஒரு பிரயோஜனமுமில்லை. அதற்காகவேதான் வாயுவாயிருந்தவன் பூலோகத்தில் ஜனித்தேன். என்னைப்பற்றி प्रथमो हनुमान्नाम என்பது முதலிய ஸ்மிருதிகள் கூறுகிறது பாருங்கள். ஸ்மிருதியைச்சொல்லுவானேன்உலகப் பிரஸித்தமான बाहंत्या என்பதுமுதலிய வேதமந்திரங்கள் கூறுகிறதுபாருங்கள் நான் இவ்வளவுமஹிமை வாய்ந்தவன் என்னிடத்தில் அனுப்தத்துவபுத்தியும் எனது கிரந்தங்களில்அப்பிராமாண்ய புத்தியும் இனி உங்களுக்கு ஏற்படவேண்டாம். என்று அப்பா குதிருக்குள் இல்லை என்கிற குருகுருப்புள்ளவனது வார்த்தையைப்போல் தானே தன்னைப் விசேஷமாகப் புகழ்ந்துகொண்டு ஜனங்களை மத்வர் ஏமாத்துகிறார். பார்த்தீர்களா? தனக்குப் பூரணப் பிரஜ்ஞர் என்பது முதலிய பிருதுகளைத்தானே கொடுத்துக்கொண்டார். தான் நேரில் நாராயணருடைய சிஷ்யராம் அல்லது வேதவியாஸருடைய சிஷ்யராம். மத்வர் சொல்லித்தான் நமக்குத் தெரியவேணும். என்ன வேடிக்கை. நாராயணன் இவரை இவ்வித அத்புத கிரந்தங்களைப்பண்ணும்படியாகப் பிரேரித்தாராம். யாரை மத்வர் ஏமாத்துகிறார். இவரால் எல்லாரையும் ஏமாத்த முடியுமா? இந்த ஆத்மப்பிரசம்ஸைகளால் வாசகர்களே நீங்கள் ஏமாந்து விடாதீர்கள். இதுமாதிரி எவ்வளவோ மனுஷ்யர்கள் ஆத்மப்பிரசம்ஸை பண்ணிக்கொள்ளுவார்கள். அதனால் எல்லாரும் உள்ளபடி உண்மையான பண்டிதர்களாக ஆகிவிடலாமா? இதனால் ஏமாந்துவிடக்கூடாது. பெரியோர்கள் ஆத்மப்பிரசம்ஸை பண்ணிக்கொள்ளமாட்டார்கள். அவர்களுக்கு நேரில் மற்றவர்கள் பிரசம்ஸித்தாலும் அவர்கள் லஜ்ஜையை அடைவார்கள். இது பெரியோர்களது லக்ஷணம். மற்ற பாஷ்யகாரர்கள் தாமே தம்மைப் புகழ்ந்து கொள்ளவில்லை. அவர்களது பாஷ்யாதி கிரந்தங்களையும் அவர்களது அமானுஷ சக்திகளையும் பார்த்துமற்றவர்கள் கிரந்த மூலமாக அவர்களது மஹிமைகளை உலகத்திற்கு வெளியிட்டிருக்கார்கள்.

यदि सन्ति गुणाः पुंसां विकसन्त्येव ते स्वयम् ।
न हि कस्तूरिकामोद श्शपथेन निवार्यते ॥

"புருஷர்களுக்கு குணங்கள் இருக்குமானால் அதுகள் தானாகவே பிரகாசத்தை அடைந்துவிடும். கஸ்தூரியின் வாஸனையைச் சபதம்பண்ணித் தடுத்தால் வீசாமலிருக்குமா" என்றபடி மற்ற

பாஷ்யகாரர்களின் அத்புத சக்திகள் மத்வரைப்போல் அவர்கள் சொல்லாமலே உலகத்தில் பரவிவிட்டன. அதற்கென்னசெய்கிறது. அஸூயைப்பட்டு என்ன ப்ரயோஜனம். அதுபோல் மத்வரிடத்திலும் குணங்களிருக்குமானால் அவர் தாமே சொல்லிக்கொள்ளுவானேன். தாம் சொல்லிக்கொள்ளாமல் போனால் உலகத்தில் தனது சக்தி பரவாதென்கிற ஸந்தேஹம் மத்வருக்கு இவ்விதம் ஆத்மப்பிரசம்ஸையாலும் இதர பாஷ்யக்காரர்களின் தூஷணங்களினாலும் அபூர்வ சுருதிஸ்மிருதி வசனங்களினாலும் தனது கிரந்தங்களைப் பெரும்பாலும் மத்வாச்சார்யாள் பூர்த்திபண்ணுவானேன். அதனாலேயே அவருடைய லோக விலக்ஷண மஹிமையும் இதர பாஷ்யகாரர்களுடைய அமானுஷ வைபவங்களும் உலகத்திற்கு உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளங்கவில்லையா?

आत्मप्रशंसायामष्टमोऽध्याय: ॥

“ஆத்மப் பிரசம்ஸையில் எட்டாவது அத்யாயம்” என்று சொல்லுவதுண்டு. மத்வகிரந்தங்களில் எல்லா அத்யாயங்களிலும்ஆத்மப்பிரசம்ஸை பரநிந்தை இரண்டுமே இருக்கிறது. அந்த கிரந்தங்களைப் பார்த்தவர்களுக்கு இந்த விஷயம் வெளிப்படை. சொல்லவேவேண்டாம். இந்த ஸமயத்தில் ஸ்ரீ நீலகண்டதீக்ஷிதரவர்கள் கலிவிடம்பனம் என்கிற கிரந்தத்தில் கூறிய ஓர் சுலோகம் எனக்கு ஜ்ஞாபகத்தில் வருகிறது. அதைக்கூறி இந்தஐந்தாவது ரஹஸ்யத்தை முடித்துக் கொள்ளுகிறேன்.

स्तोतार: के भविष्यन्ति दुर्मतेर्जगतीतले ।
न स्तौति चेत् स्वयं च स्वं कदा तस्याऽस्तु निर्वृति: ॥

“எங்கே போனாலும் கோணலான புத்தியையுள்ள மனுஷ்யனைப் பூலோகத்தில் யார்தான் ஸ்துதிப்பார்கள். அவ்வித மனுஷ்யன் தன்னைத்தானகவே ஸதோத்திரம் செய்து ஸ்வயமர்யாதைக்காரர்கள் தம்மைத்தாமாகவே மர்யாதை செய்துகொள்ளவேண்டும். மற்றவர்கள் நமக்கு மர்யாதை செய்யமாட்டார்கள் என்றுசொல்வதுபோல் தனக்குத்தானே மர்யாதை செய்துகொள்ளாமல் போனால் அவனுக்குத்தனது ஸ்துதியினாலுண்டாகும் ஆனந்தம் எப்போ ஏற்படும். பிறர்கள் தன்னை ஸ்துதிக்கப்போகிறதில்லை. தன்னைத்தானும் ஸ்தோத்ரம்செய்துகொள்ளாமல்போனால் அவன்

ஜன்மாவுக்கே ஸ்தோத்திரத்தாலுண்டாகும் ஆனந்தம் இல்லாம லல்லவாபோய்விடும். அப்படி அந்த மனுஷ்யன் ஆனந்தத்தை அடையாமல் போகலாமா அடையட்டுமே.

लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

என்று சுலோகத்தின் பொருள்.

இவ்விதம் இதுவரையில் ஐந்து ரஹஸ்யங்களால் மத்வாவ தாராத்புத லீலா ரஹஸ்யங்களைக் கூறினோம். மத்வமதஸ்தர்கள் நமது பரமாசார்யாளையும் அவர்களுடைய சிஷ்யர்களான பெரும் பாலர்களையும் தனது மதத்தினால் அகாரணமாக அத்வைதம் அவைதிகமென்றும் அத்வைதமதம்பிரச்சன்னபௌத்தமென்றும் அத்வைதிகள் அஸுரர்களென்றும், தன மதத்தினாலும், வித்யா மதத்தினாலும், வருத் தூஷணங்களைக் கூறிக்கொண்டே இருப் பதாலும், பத்திரிகைகள் தமக்கு ஸொந்தமாகிவிட்டதென்று கண்டபடி பத்திரிகைகளில் எழுதுவதாலும், நாமும் இனி உதா ஸீனமாக இருக்கக்கூடாதென்று கருதி மத்வமதத்தில் உள்ள உண்மையான சிற்சில ஆபாஸங்களை வெளிப்படுத்தினோம்.

இதுவரையில் நான் எழுதியதை ஆர்யதர்மமூலமாக வெளிப்படுத்தியதற்காக எனது குரு சரணாளையும், பாஷ்யபாவஜ்ஞர்ஸமிருதிபூஷணம் என்கிற உண்மையான பிருதுகளை ஸ்ரீஜகத் குரு ஸ்ரீமதாசார்ய பகவத்பாதாளாலே கொடுத்து அனுக்ரஹிக்கப் பட்டவாளாயுமுள்ள ஆர்யதர்மம் பத்திராதிபர் அவர்களுக்கு எனது அனந்தவந்தனங்களை ஸமர்ப்பிக்கின்றேன். எனதுஸ்வல்ப்ப விஷயங்களையுள்ள உபன்யாஸங்களிலுள்ள அதிகமான தோஷங் களை விட்டு ஸ்வல்ப்பமான குணபாகத்தைமாத்திரம் கிரஹிக்குமாறு ஆர்யதர்மாபிமானிகளை வேண்டுகிறேன். இத்துடன் இவ்வரு ஷத்து உபன்யாஸத்தைப் பூர்த்தி பண்ணிக்கொள்ளுகிறேன். இனியும்சிலரஹஸ்யங்கள் முக்யமாயுள்ள துபாக்கியிலிருக்கின்றன. அவற்றையும் எழுதிப் பிறகுஸமாஸமான ஆவச்யக வார்த்தைகளை எழுதவேண்டியிருத்தலால் அதுகளைப்பற்றி அடுத்தவருஷாரம் பத்தில் நான் எழுதுவதைத் தவக்கமில்லாமல் போடவேண்டு மென்று மஹிமைவாய்ந்த பத்திராதிபர் அவர்களை வணக்கத் துடன் கேட்டுக்கொண்டு இத்துடன் பரிஸமாப்தி செய்துகொள் ளுகிறேன். சுபம். போலகம்ஸ்ரீராமசாஸ்திரிகள்.

கங்காவதரண தத்வம்.

(முன் தொடர்ச்சி.)

விச்வநாதஸ்துதி.

7-வது ஸர்க்கத்தில் 1-முதல் 34-வரை, கங்கை பெருகிவரும் போது காசி நகரில் வஸிக்கின்ற பெண்மணிகள், முனிவர்கள். அம்மஹாநதியைத் துதிக்கவே அதைக்கேட்டுக்கொண்டு பகீரதன் தேரிலிருந்து இறங்கி விச்வனாதரின் சன்னிதியை அடைந்தான். பிறகு பகீரதன் சந்தோஷங்கொண்டு, விச்வனாதரை நமஸ்கரித்து துதிக்கலானான்.

भव भूतपते विषाशनो भव भिक्षु र्भव भोगि भूषणः ।
तदपि प्रतिपत्तुमर्थये तत्र सारूप्यविडम्बना महम् ॥३७॥
अयि लुब्धकताधिरोप्यता मपि वा भिक्षुकताऽभिनीयताम् ।
इयतैव किमर्थिनो नरा जहति त्वां कपटैकशिक्षिताः ॥३८॥

பூதநாதனே? நீ விஷமுண்டாலும்ஸரி; பிக்ஷுவானாலும்ஸரி; ஸர்ப்பபூஷணனாயிருந்தாலும்ஸரி; எந்தவேஷம் போட்டாலும் அதையே அடைவதற்கு வேண்டுகிறேன். பிரபுவே; நீர் வேடனாய் அபினயித்தாலும், பிக்ஷுகனாப் அபினயித்தாலும், கபடத்தையே நன்றாய்க் கற்றுக்கொண்ட அர்த்தி ஜனங்கள் உம்மை விடப்போகிறார்களா என்ன?

जटिलोसि दिगम्बरोसि यज्जितकामस्य तदर्हमेव ते ।
गुणगृह्य इतीदमुच्यते किमपि च्छादय सव्यमङ्गकम् ॥४०॥

நீர் சடையாண்டியாயிருக்கிறீர்; திக்குகளையே வஸ்திரமாயடைந்தவராகிறீர்; அது உமக்கு அர்ஹமே; குணங்களைகிரஹிப்பீர் என்று என்னால் சொல்லப்படுகிறது; இடது அங்கத்தை மறைத்துக் கொள்ளும் (அர்த்தநாரீச்வார் ஆனதால் ஸ்திரீபாகமான இடது பாகத்தை மறைத்துக்கொள்ளும் என்று கருத்து.)

सति हेमगिरौ शरासने सति वेश्मन्यपि राजते गिरौ ।
भवता शिव भैक्षवृत्तिना क्षमितव्यः समयः कियानयम् ॥४४॥

பொன்மலையான மேரு உமக்கு வில்லாகவும், வெள்ளிமலையான கைலாயம் வீடாகவுமிருப்பினும் எத்துணைகாலம் உம்மால் பிச்சையெடுத்து காலங்கழிக்கவேண்டியிருக்கிறது.

वहसीन्दुमनेन किंभवेद्भवतो वस्तुषु सारवेदिता ।
भवदादरणा त्कपालव द्भवति प्रत्युत तस्य हेयता ॥४५॥

நீர் தலையால் சந்திரனைவஹிக்கிறீராயினும் அதனாலுமக்கு பொருள்களுக்குள் ஸாரமானவற்றை அறிதல் என்பது ஏற்படுமா என்ன? மேலும் நீர் ஒரு பொருளை ஏற்றுக்கொண்டால் கபாலம் (மண்டையோடு)போல் அதற்கு குறைவே ஏற்படும்.

त्रिपुरेषु परीक्षितं स्मितं मदनो वेद कटाक्षमीश ते ।
ननु नाम जनो जिजीविषु र्बहुमानं भवतोऽर्थयेत कः ॥४६॥

ஈசனே! உமது மந்தஹாஸம் த்ரிபுராளிடம் பரீக்ஷிக்கப்பட்டிருக்கிறது. உமது கடாக்ஷத்தை மன்மதன் அறிந்திருக்கிறான். உயிரோடிருக்க விரும்புகிற எவன்தான் உமது வெகுமானத்தை வேண்டுவான்?

सकृदत्र समेयुषां नृणां शिरसि स्थापयसे सुरापगाम् ।
अमुमर्थमजानता मया कियदस्यै सरिते कृतं तपः ॥४७॥

ஒருதடவை இக் காசிமாநகரில் தங்குகின்ற மனிதர்களின் தலையில் தேவகங்கையை இருக்கச்செய்கிறீர். இந்த விஷயத்தையறியாதனால் இந்த நதியின் பொருட்டு எவ்வளவோ தவஞ்செய்யப்பட்டது என்றுநிந்தாஸ்துதிகளாலும் நேர்முகமானஸ்துதிகளாலும் சங்கரபெருமானை பகீரதன் துதித்துத்திரும்பினான்.

आचान्तो नयनै रपक्ष्मवलनै रायम्य पौरै र्जनै-
र्धावंधावमुपावरुन्ध्य सरणिं सङ्घीभवद्भिः पुरः ।
स्पृष्टः साधय साधयेति लहरी हस्तैरिवा न्वक्तया
त्रस्यन्त्या पुरशासनादतिययौ देवः स वाराणसीम् ॥

முன்னால் பட்டணத்து ஜனங்களால் ஒன்றுகூடி ஓடிவந்து வழியைத்தடுத்து இமைகொட்டாமல் கண்களால் அடக்கிப் பார்க்கப்பட்டுக்கொண்டும், உமது கார்யத்தை சாதித்துக்கொள் என்று சொல்வதுபோல் புராரியினிடமிருந்து பயந்தவளான கங்காதேவியால் அலைகளாகிற கைகளால் தொடப்பட்டுக்கொண்டும், அந்த பகீரத சக்கிரவர்த்தி காசிமாநகரைத்தாண்டினான்.

ஸர்வேச்வரஸ்தவம் என்ற ஏழாவது ஸர்க்கதத்துவம் முற்றிற்று.

எட்டாவது ஸர்க்கதத்துவம்

முதலாவது ச்லோகம்முதல் ஏழாவது ச்லோகம்வரையில் கங்காதேவி, வழியில் பெருகுவதை வர்ணித்து, அவள் அனேக கிளைகளாகப்பிரிந்து சமுத்திரத்தின் சமீபத்தையடைந்தாள் என்று கவி வர்ணித்துப் பின்னும் கூறுவதாவது—

अनशनव्रतकार्शितकुम्भभूसलिलपारणसंशयिताम्भसः ।
अवततार बिले किल केवले जलनिधेरथ भूमिपतेरथः ॥८॥

பிறகு பகீரத சக்கிரவர்த்தியின் தேரானது, உபவாஸத்தால் இளைத்த அகத்தியமாமுனிவர் பாரணைசெய்ததால் வற்றின நீரையுடைய சமுத்திரத்தின் பிலத்தில் இறங்கிற்று.

இருள் மிகவும் சூழ்ந்திருந்த அக்குஹையில் சூரியகிரணம் படுவதற்கு சந்தர்ப்பமே கிடையாது.

उपनिपत्य पुरेव पिपासया जिगमिषन्ति न यावदितोऽन्यतः ।
जलधरा इति तावदविन्धनो हुतवहः किल तानपि जघसे ॥

மேகங்களும் முன்போல் தாகத்தால் கிட்டவந்து இங்கிருந்து எவ்வளவுக்குள் வேறிடத்தில் போகவிரும்பவில்லையோ அவ்வளவுக்குள் அவைகளைக்குடித்துவிடுவோமென்று, மேகங்களாக பிரமித்து படபாக்கினி அந்நீரை இழுத்தது.

இவ்வாறு 23ச்லோகம் வரை சமுத்திரத்தில் கங்கை விழுவதை வர்ணித்து மறுபடியும் கவி வர்ணிக்கிறார்—

मधुरिमैकरसापि सुरापगा लवणतामगमत् पतितार्णवे ।
भुवनमूल्यरसापि हि साहिती कुकविवक्त्रगता कुरुते व्यथाम् ॥२२॥

ஆகாய கங்கை, மதுராஸம் நிரம்பினவளானாலும், சமுத்திரத்தில் விழுந்ததும் லவணரஸத்தை அடைந்தாள். உலகத்தையே மூல்யமாகும்படிசெய்யும் ரஸந்ததும்பும் ஸாஹித்தியமானது குகவிகளின் வாக்கையடைந்தால் மன வருத்தத்தைச் செய்கின்றதல்லவோ.

सगरनन्दनरन्ध्रसमुत्पतद्भुजगराजपुरीतिभिरावृते ।
जलनिधेः कुहरे लुठनादभूत् सुरनदीसलिलेष्वपि नीलता ॥२

ஸகாகுமாரர்களால் உண்டாக்கப்பட்ட குஹையிலுள்ள ஆதிசேடன் நகரில் உள்ள இருள் சூழ்ந்த சமுத்திர குஹையில் விழுந்ததால் கங்காநதியின் நிறமும் நீலமாயிற்று.

चुलुकितो मुनिनापि गतत्रपः परिजुघोष पुरेव तदार्णवः ।
मतिमता ध्वनितव्यमदोषवत्क इव वेद गतं सदसच्चवा ॥३०॥

அகத்தியமுனிவரால் முன்பு ஆசமனம் செய்யப்பட்ட சமுத்திரம் வெட்கமில்லாமல் கோஷிக்கத்தொடங்கிற்று. புத்திசாலியால் தோஷமற்றதுபோல் தொனிக்கவேண்டும். நல்லதோ; தோஷமுள்ளதோ; சென்றவிஷயத்தை யார்தான் அறிகிறான்.

பிறகு பகீரத சக்கிரவர்த்தி, நாகரத்தினங்களால் விலக்கப்பட்ட இருளோடு கூடின ரஸாதலத்தில் ஆதிசேடனால் பாதுகாக்கப்பட்டதான போகவதிபுரியைக் கண்டான்.

अथ परीत्य स भोगवतीं पुरीममरसिन्धु सखो वसुधेश्वरः ।
शुचि विविक्तमनोरममासदत् भगवतः कपिलस्य तपोवनम् ॥४७॥

பிறகு பகீரத சக்ரவர்த்தி, தேவகங்கையோடு போகவதீபுரியைச் சுற்றிவந்து பரிசுத்தமும் ஏகாந்தமாயுமுள்ள கபிலபகவானின் தபோவனத்தை அடைந்தான்.

कपिलकोपहुताशनसंभृतं सपुरतः पितृभस्म निरीक्ष्य तत् ।
प्रमदशोक समागममूर्च्छितो विविधमस्तु दधौ युगपद्दृशोः ॥४८॥
अथरथाद्दवतीर्य भगीरथे सगरजानुपसर्पति वीक्षितुम् ।
भसितराशि ममज्जयदम्भसा भगवती सुरलोकतरङ्गिणी ॥४९॥
सुरसरि त्कबलीकृतशोषितं दिवि यदास्तपदं त्रिदिवौकसाम् ।
तदपि तत्क्षणनिर्हृतकल्मषैरपहृतं बलिभिः सगरात्मजैः ॥५०॥
प्रथमलब्धसुरालयसंभृत प्रतिनवामृतपानगलत्तृषः ।
तदपवर्जितमञ्जलि मम्भसामपि पपुः पितरः सुतवत्सलाः ॥५१॥

அவன் கபிலமாமுனிவரின் கோபாக்கினியால் பொசுக்கப்பட்ட பித்ருக்களின் அச்சாம்பலைக்கண்டு, சந்தோஷம் சோகம் இவைகளால் மூர்ச்சையடைந்து, ஆநந்த பாஷ்பத்தையும், சோகக் கண்ணீரையும் ஒரேகாலத்தில் விட்டான். பிறகு தேரிலிருந்து பகீரதன் இறங்கி ஸாகரர்களைப்பார்ப்பதற்கு சமீபத்தில் போகும்

போது தேவகங்கை தனது தீர்த்தத்தால் சாம்பலாயிருந்த அவர்களை முழுகச் செய்தாள். எற்கனவே ஆகாயகங்கை பெருகிவரும்போது ஸ்வர்க்கத்தில் மூழ்கின இடம்போக மீதியா யிருந்த இடத்தை அக் கணத்திலேயே பாபம் நீங்கப்பெற்று பல்சாலிகளான சகாகுமாரர்கள் அடைந்தனர். முன்னாலேயே தேவலோகத்தில்கிடைத்த புதிய அமிருதபானத்தால் தாஹ விடாய் தீர்ந்தவர்களான முன்னோர்கள், பிள்ளையினிடம் உள்ள அன்பின் மேலீட்டால், அப்பகீரதனால் கொடுக்கப்பட்ட தர்ப்பண தீர்த்தத்தையும் பானஞ்செய்தனர்.

பிறகு பகீரதன், கார்யம் நிறைவேறினவனாய் சந்தோஷித் திருக்கும்போது, பிரம்மதேவர் அவனைப்புகழ்ந்தார்.

ஸகர சக்கிரவர்த்தியும் பிறகு அம்சுமானும் அவனுக்குப் பிறகு தீலீபனும் கொடூரமான தவஞ்செய்தும் மனோபீஷ்டத்தை அடைவதில்லை. அவ்விதமானமனோபீஷ்டத்தை நீ யடைந்தாய். உனது கீர்த்திவார்த்தைகளால் எடுத்துக் கூறமுடியாதது. வேத வாக்கியங்களும் எவரைத் தேடிதேடி வீண் சிரமத்தையடை கின்றனவோ; அவ்விதமான பாமசிவனையும் அடையவும் கங்கா தேவியைச் சுமக்கும் விஷயத்தில் கட்டளையிடவும் யார்வல்லவன். முந்தி ஒருசமயம், தசகண்டனும் எந்த பரமசிவனின் கால்கட்ட விரலால் நசுக்கப்பட்ட தனது புயங்களை இழுத்துக்கொள்ள முடியாதவனானனே. அப்பேர்க்கொத்த சிவபெருமானின் சடை முடியையடைந்த கங்காதேவியையும்; எவன்தான் துணிச்சலாக இழுக்கமுடியும்? யாதொரு காரணத்தால், சகாகுமாரர்கள் ஸ்வர்க்கமடைந்தனரோ; வற்றிப்போயிருந்த ஸமுத்திரம் நிறப் பப்பட்டதோ; மனிதர்கள் மேலானஉலகத்தையடைகின்றனரோ; அவை யாவும் குழந்தாய்! உனது தபோபலத்தால் தான். பகீரதனே! புத்திரனை விரும்புகிற உனக்கு இந்த கெங்காதே வியே மூத்தபெண்ணாக ஆகட்டும்; என்றார், பிரம்மதேவன் சொல்வதைக்கேட்டு பகீரதன் தான் தவத்தால் கஷ்டப்பட்ட சிர மத்தைப்போக்கிக்கொண்டான். அதனால் கங்காதேவி பாகீரதி என்று பிரசித்தியடைந்தாள்.

பிறகு பகீரதன் கங்காதேவியினிடம் விடைபெற்று அங்கி ருந்து சமுத்திரக்கரையை அடைந்தான். மந்திரிமுதலானவர்

கள் சேனைகளுடன் மஹாராஜன் முகவிலாசத்தோடுவருவதைக் கண்டு ஸந்தோஷித்தனர். உடனே அலங்கரிக்கப்பட அயோத்தியில்பகீரதசக்கிரவர்த்தியை மங்களவாத்தியங்களோடு அழைத்து வந்தனர்.

मन्दाकिनी मज्जनपूतमेको विस्रंसयन्नस्य जटाकलापम् ।
उन्नम्य मौलिं प्रथयांबभूव मुक्तामयैर्दामभिरेव सान्द्रम् ॥

மந்திரிகளில் ஒருவர். கங்கையில் நீராடினதால் பாவனமாயுள்ள பகீரதனுடைய சடைமுடியை அவிழ்த்து, சிரஸ்ஸைத் தூக்கிப்பிடித்து, முத்து ஸரங்களால் கெட்டியாகக் கட்டினன். இவ்விதம் ஒவ்வொருவரும் சக்கிரவர்த்திக்கு திவ்யாலங்காரங்கள் செய்யவே, அவன் உச்சைச்சிரவஸ்ஸுக்கொப்பான வெள்ளைக் குதிரையிலேற்றிக்கொண்டு அயோத்திமாநகரில் நுழைந்தான். பிறகு சிவபெருமானையே உள்ளத்தில் நினைத்துக்கொண்டு ராஜ்ய பாரம்செய்துகொண்டு ஈசனருளால் புத்திரனைப்பெற்றுத்தகுந்த வயதில் அவனுக்கு முடிசூட்டி ராஜ்ஜியபாரத்தை ஒப்புவித்து விட்டு முடிவில் சிவபெருமானிடம் கலந்தான்.

शिवं ध्यायस्यन्त स्सकलजगतां यच्छसि शिवं
शिवोऽसि त्वं नाम्ना ननु शिवतरश्चासि विदितः ।
शिवार्थी जन्तुस्तच्छिवमखिलभावेन भगवन्
भवन्तं हित्वाऽन्यं शरणयतु कं न्यायशरणः ॥

பகவானே? நீர் இருதயத்தில் சிவத்தைத் தியானிக்கிறீர்? எல்லா உலகங்களுக்கும் சிவத்தைத் தருகிறீர்; பெயராலும் நீர் சிவனுகிறீர்; சிவதரன் என்னும் ச்ருதியால் கூறப்படுகிறீர்; சிவத்தை விரும்புகிறவனும்நியாயத்தைகதியாகக்கொண்டவனுமான எவன் தான் சிவனுகிய உம்மைவிட்டுவிட்டு எல்லாக்கருத்தோடும் வேறு யாரை சரணமடைவான். சிவமஸ்து,

K. V. சுப்பிரமண்யசாஸ்திரி.

வாரவிருத்தாந்தம்.

வர்ணாச்ரம ஸ்வராஜ்யம்:— 27 28 29உ இம்மூன்று தினங்களில் வர்ணாச்ரம ஸ்வராஜ்யசபை கல்கத்தாவில் கூடிக்கலைந்தது. 8 ஆயிரம்பேர் கூடி இருந்தனர். உத்ஸாஹம் பலமாக இருந்தது. பலப்ரபலமான தலைவர்களும் உத்யோகஸ்தர்களும் காங்க்ரஸ்காரர்களும் கூடியிருந்தனர். பற்பல மடாதிபதிகள் ஆசீர்வாதம் செய்தனுப்பி இருந்தனர். உபசாரணைச் சபைத்தலைவரும் மஹாஸபாபதியும் வர்ணாச்ரமத்துடன் கூடிய ஸ்வராஜ்யமே வேண்டுமென வற்புறுத்தி அழகாக உபன்யஸித்தார்கள்.

தீர்மாநம்:— அரசாங்கம் பற்பல அவஸரச் சட்டங்களை இயற்றி குடிகளுக்கு கஷ்டம் விளைவிப்பதையும் வைதிகர்களைக் கலக்காமல் தேசியவிஷயத்தை யோசித்ததையுங் கண்டித்தது. சாரதாசட்டத்தை அகற்றும்படி ராஜாபஹதூர் கொண்டுவரும் திருத்தம் ஆமோதிக்கப்பட்டது. கோ ஸம் ரக்ஷணம் ஸ்வதேச வஸ்து வாங்குதல் முதலியவை ஆதரிக்கப்பட்டன. அடுத்த வருஷஸபை பாம்பேயில் கூடும்.

நற்செய்கை;— 27உ கோயம்பத்தூர் வக்கீல்குமாஸ்தா சங்கத்தார் அவ்வூருக் கருகிலுள்ள மருதமலை ஸுப்ரமண்யருக்கு அபிஷேகார்ச்சனையும் இதை தர்சிக்கவந்த பக்தர்களுக்கு ஸமாராதனையும் செய்தனர். இதுபோல் ஏனையஸங்கங்கள் ஆண்டுக்கோர்முறையாவது நல்ல கார்யம் செய்துவந்தால் நாட்டுக்கும் நமக்கும் நற்கதி உண்டாகும். தெய்வபக்தி இல்லாதஸபை ஸபையாகாது.

மஹாமஹோபாத்யாயர்:— இப்பட்டம் அரசாங்கத்தால் வழங்கப்படுவது. இப்பட்டம் பெற்றோருக்கு ஸன்மானமாக ஆண்டுதோறும் நூறு ரூபாய் கொடுக்கப்படுகிறது. இப்பட்டத்திற்குரிய யோக்யதை உடையவித்வான்கள் பலர் தென்னாட்டில் இருக்கின்றனர். பலகாரணங்களால் அரசாங்கம் இப்பண்டிதோத்தமர்களை ஆதரிக்காமலிருக்கிறது இவ்வாண்டு சென்னை ஸம்ஸ்கிருத கலாசாலைத் தலைவர் வேதாந்தபூஷணம் பிரும்மஸ்ரீ கருங்குளம் க்ருஷ்ணசாஸ்திரிகளவர்களுக்கு வந்திருக்கிறது,

பல ஆண்டுகளுக்கு முன்னமேயே இவாளுக்கு வந்திருக்கவேண்டும். பூர்ண யோக்யதையும் ஸதாசாரமும் லோகோபகார சிந்தையுமுள்ள சாஸ்திரிகளவாளுக்கு இப்பட்டம் வந்ததைக்கண்டு அவாளது சிஷ்யர்களுடனும் நண்பர்களுடனும் நாமும் ஸந்தோஷிக்கிறோம்

அபிஷேகம்:—திருவிடை மருதூரில் அமர்ந்துள்ள அகோர வீரபத்திருக்கும் நடராஜாவுக்கும் சென்ற வாரம் சிறப்பாக அபிஷேகம் நடந்தது. இதை தனது ஸொந்த செலவில் பல ஆண்டுகளாக நடத்துபவர் ஸ்ரீமான் வெங்கட்டராமய்யர் என்பார் இவ்வாண்டும் அபரிமிதமான அபிஷேக ஸாமக்கிரியைகளைச் சேகரித்து உடனிருந்து செவ்வனே அபிஷேகத்தைச் செய்வித்தார். விபூதி அபிஷேகம் கண்ணைக்கவர்வதாக இருந்தது. பரமசிவன் அபிஷேகப்பிரியர். ஆதலின் அம்மூர்த்திசெய்துவைத்த அபிஷேகம் இந்த தார்மிகர் குடும்பம் செழித்துவளர பகவானதுகடாக்ஷாமிருதத்தைப் பெருக்கும் என்பதுதிண்ணம்.

மஹன்யாஸம்:—திருவட்டீசுவரன்பேட்டை ஸ்ரீ சங்கரமடத்தில் அத்யயநஸபை ஒன்று பலவருஷங்களாக நடைபெற்று வருகிறது. ஸமீபத்தில் ஆரம்பித்து மஹன்யாஸத்தில் விநியோகமாகும் மஹாமந்த்ரங்கள் கற்பிக்கப்படுகின்றன. நல்விஷயத்தில் ஸ்ரீ ஜகத்குரு சங்கரபகவத் பாதாளது அநுக்ரஹம் சுரக்கும். இச்சபையார் இன்னமும் ஸ்ரீ குரு கருணைக்குப் பாத்ரமாகும்படி தன்னைச் செய்துகொள்ளுமென நம்புகிறோம்.

உபன்யாஸம்:—1௳ சீர்காழியில் ஓர் டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராமாயணத்தில் ஸுக்ரீவ பட்டாபிஷேகம் என்பதைக்குறித்து அழகாக உபன்யாஸம்செய்தார். உள்ளூர் தாசில்தார் அக்ராஸநம் வஹித்தார். உத்யோகத்திற்குச் சென்றால் மதவிஷயமான கார்யங்களைக் கவனிப்பதே அகௌரவம் என்று சிலர் நினைப்பர். இருஉத்யோகஸ்தர்களும் இதிலீடுபட்டது ச்லாக்யமே. மற்ற உத்யோகஸ்தர்களுக்கும் மதாபிமான மூட்டும்படி பரமனை வேண்டுகிறோம்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோமதேவசர்மா.